
மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

மலர் 10] ஆனந்த ஞு — வைகாசி மீ [இதழ் 7

[172-வது மூலிகை]



வெள்ளைப்பூண்டு

[விலை 50-காசு

உ

முருகா.

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

வைகாசி இதழில்

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

முருகா.



எங்கும் இன்பம் நிறைக!

எடுப்பு

எங்கும் இன்பம் நிறைக முருகா
இதுவே என் விண்ணப்பம் (எங்)

தொடுப்பு

மங்காத பக்தியில் மன்னுயிர் தழைக்க
சிங்கார வேலாவுன் சேவடியில் திளைக்க (எங்)

முடிப்பு

சங்கம் வளர்த்த தண்டமிழ் வளர்க
எங்கும் கலைகள் இணைந்து தழைக்க
பங்கமில் வாழ்வு யாவரும் வாழ்க
தங்கம்போல் உள்ளம் தழைத்திட வாழ்க (எங்)

எங்கும் எதிலும் அன்பு நிறைக
எங்கும் எதிலும் பண்பு நிலைக்க
சிங்கம்போல் மானத்தில் செருக்கினை அடைக
சங்கம்போல் மனத்தில் தூய்மை பொலிக. (எங்)

[தேவ - நாராயணன், சென்னை-21]

இவ்விதழில் திருத்தணிகை சித்திரா பௌர்ணமி விழா திருமுழுக்கு விபூதிப் பிரசாதம் அனுப்பி வைத்திருக்கிறது. கவனித்து எடுத்து அணிந்து முருகனருள் பெறுக.

கார்ட்டூன்


தலைவலிக்கு மருந்து கொடுத்தீங்களா....
வயிற்று வலி வந்தது? மருந்து சாப்பிட்டேன்...
முதுகு வலி வந்தது? மருந்து சாப்பிட்டேன்...
இப்ப உடம்பெல்லாம் வலிக்குது!
?!
DR. KAILAS

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] ஆனந்த ௵ — வைகாசி ௴ மே-74 [இதழ் 7

சித்தர் மருந்துகளுக்கு கட்டுப்பாடு ஏன்?

மற்றைய நவீன முறை ஆங்கில மருந்துகள், லேபரட்டரி செய்முறைகளில், "பேட்டண்ட் மருந்துகளில்" இன்னின்ன மருந்துகள் இந்த அளவு கலந்துள்ளது என்று குறிப்பிட்டு எழுதி; இந்த தேதி வரையில் இந்த மருந்து கெடாது என்றும் குறிப்பிடவேண்டும். அத்துடன் தயாரித்த தேதியும் நெம்பரும் குறிப்பிடவேண்டும்.

இது விற்பனை நோக்கம் கருதி தயாரிக்கப்படும் மருந்து கம்பெனிகளுக்கு அரசு விதிக்கப்படும் ஆணை. மருந்துக் கட்டுப்பாடு சட்டம் (Drug Control Act) எனப்படும். சித்த மருந்துகள் தயாரிப்புக்கும் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரவும், அதை அமுல் செய்யவும் முயற்சிகள் நடைபெறுவதாக அறிகிறோம்.

இப்படிச் சித்த மருத்துவச் செய்முறைகளில் ஒரு சில மூலிகைச் சரக்குகள். நாட்டு மருந்துக் கடை சம்பைச் சரக்குகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொடி (சூர்ணம்), இளகல் (லேகியம்), தைலங்கள் போன்றவைகட்கு அந்த சட்டம் பொருந்துவதாக இருந்தாலும் கூட இவைகள் ஆங்கில மருந்துகள் போல, ஒரு குறிப்பிட்ட காலம் வரை கெடாமல் இருந்து, பின்பு அவை கெட்டுப்போகும் எனலாம். ஆனால் இம் மாதிரியான மருந்துகள் எல்லாம் நோய்களை முற்றிலும் தீர்க்கக் கூடியன அல்ல!

ஆனால், தீராது! என்று பல மருத்துவ முறை நிபுணர்களால் கைவிடப்பட்ட நோய்களை "சித்த மருத்துவ முறைகளில்" அதிலும் பரம்பரையாகவே தொடர்ந்த (வைத்தியர்கள்) மருத்துவர்கள் தங்கள் குடும்பம் வரையில் ரகசியமாக தயாரித்து "தீராத பிணிகளுக்குக் கொடுத்து பூரணமாக குணம் செய்துவிடுகிறார்கள்." இம் மாதிரி

யான படிக்காத மேதைகள் இன்றளவும் தமிழகத்தில் இருந்துகொண்டு நோய்களைத் தீர்த்து வருவது யாவருமறிந்த ஒன்றே! இப்படி ரகசியம் என வைத்து நோய்களைத் தீர்ப்பவர்களிடம் இந்த மருந்து கட்டுப்பாடு சட்டம் எங்கனம் வெற்றிபெறும் என்பது தான் விளங்கவில்லை!

அதிலும் சித்த மருத்துவத்தில் — பற்பம், செந்தூரம், கட்டு, களங்கம் போன்றவைகளை மிகுந்த சிரத்தையுடன் தயாரித்துவிட்டால்; பிறகு அவைகள் கெட்டுப்போகும் என்ற பேச்சுக்கே இடமில்லை! பல நூற்றுண்டுகள் அவை கெடாது. அது மட்டுமல்ல! ஒரு சில நோய் களுக்கு கழுதையின் சிறுநீர், கோழிப் பீச்சு, யானைத்தோல், பன்றியின் மலம், சில காட்டுப் பிராணிகளின் கழிவுநீர்கள், குருவண்டு, கரிவண்டு, புள்ளிவண்டு போன்றவைகளின் நச்சு சத்துக்கள் சேர்க்கப்படுகின்றன. மேலும் பூநீர், செயநீர், முப்பூ, போன்ற முறைகளைச் செய்ய பூசையால் தெய்வ பலமும், காலம், இடம், நேரம் பார்த்துச் செய்யப்படுகின்றன. இப்படித் தயாரிக்கப்படும் 'மருந்துசெய் முறைகளை' மருந்து கட்டுப்பாடு சட்டத்தின் மூலம் மக்களுக்கு பகிரங்கமாக எங்ஙனம் கூற இயலும்? "கழுதை மூத்திரம் கலந்த மருந்து, யானை லத்தி சேர்ந்த மருந்து" என லேபில் ஒட்டினுல் யார் அந்த மருந்துகளை விரும்பி உண்ணுவார்.

தற்போது ஆங்கில மருந்துசெய் சாலைகளில் தயாரித்து வரும் விற்பனை மருந்துகள் — விற்பனை லைசென்சு பெற்றுத்தான் விற்பனை யாகின்றன. இவைகளில் உயிருக்கு ஆபத்து இல்லை என்று பரிசோதனை செய்து அரசு அனுமதியளித்த மருந்துகளில், அண்மையில் பிப்மால்-சி என்ற மருந்து பல உயிரைக் குடித்துவிட்டதாக செய்தி மூலம் அறிந் தோம். அதே போல், 'ஊசி போட்டதால் மரணம்' என்ற தினச் செய்திகள் வராத நாட்களே இல்லை எனலாம். இப்படி ஏதாகிலும் "சித்த மருத்துவரிடம் சென்று மரணம்" என்ற செய்திகள் எப்போதா கிலும் வந்துள்ளதா? ரகசியம் என்று ஒருசில பொருள்களை மறைத்துக் கையாளப்படுவதால்தான் மற்றவர்களால் கைவிடப்பட்ட; தீராத் பல நோய்கள் சித்த மருத்துவர்களால் தீர்க்கப்படுகின்றன.

நம் நாட்டில் பரவலாக இம்மாதிரி மக்கள் தொண்டு செய்யும் சித்த மருத்துவப் பரம்பரையாளர்கள் இன்னும் இருக்கத்தான் செய் கின்றனர். இவர்கட்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கத்தான் இம் மாதிரி சட்டம் வருகிறது என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியில் பரம்பரை மருத்துவர் என்ற R.I.M.P. விருது களை, கேவலம் என்று நாம் நினைக்கும் குருவிக்காரனுக்கும் அவன் தகுதி திறமை அறிந்து வழங்கினர். இப்பொழுது பரம்பரை மருத்துவர்கட்கு R. I. M. P. விருதுகளை வழங்குவதே அவமானம் என்று நினைத்து அதனை வழங்க மறுத்துவிட்டது நமது அரசு.

சித்த மருத்துவர்களுக்கு பாடுபடுவதாக கூறிக்கொள்ளும் தமிழகஅரசு மறைமுகமாக பரம்பரை சித்த மருத்துவர்களை அழித்து வருகிறது என்பதனை யாரும் மறுக்க இயலாது. ©

உ
முருகா.

மூலிகை மணி

மாணவர் மருத்துவப் பயிற்சித் துவக்க விழா நிகழ்ச்சி அறிக்கை.

எல்லாம்வல்ல திருமுருகன் அருளால் கடந்த 5—5—74 அன்று திருத்தணிகை மலைமீது காலை 6-மணிக்கு, தணிகை வள்ளல் விசுவரூப தரிசனத்துக்குப் பின்பு, மூலிகை மணி ஆசிரியர் நடத்தும் (தபால் வழி) மருத்துவப் பயிற்சித் துவக்க விழா ஆரம்பிக்கப்பட்டது.

தமிழகத்தின் பல இடங்களிலிருந்து மாணவ மாணவியர் வந்து கலந்துக்கொண்டனர். சரியாக 6-45-மணிக்கு ஆசிரியர் உரையைத் துவக்கினர். மாணவர்கள் உறுதிமொழி உரையை வழிமொழிந்த பின்னர், மருத்துவச் சேவையின் குறிக்கோளை அறிவுரை செய்தார். மனப்பிணி நீங்க, முதலில் மருத்துவர் தாம் மனதால் தூய்மையாகி திருவாசகம், சண்முக கவசம், கந்தர் அநுபூதி பாடல்களை மனப்பாடம் செய்து பக்தியை பெருக்கிக்கொண்டு மன நோய்களை (விபூதி) திருநீரால் போக்கும் வழி வகைகளைப் பற்றி உபதேசித்தார்.

பின்னர், துவக்க விழாவில் 'சித்த மருத்துவத்தின் கருப்பொருள்' 'நோயும்-மருந்தும்' என்னும் நூல்களையும் வந்திருந்த மாணவர்கட்கு ஆசிரியர் வழங்கவும் மாணவர்கள் குருநாதர் அடிபணிந்து வணங்கி பெற்றுக்கொண்டனர்.

பயிற்சித் துவக்க விழாவில் கலந்துக்கொள்ளும் வாய்ப்பு பெருத மாணவர்கள் எல்லாம் அடுத்த ஆண்டு சித்ரா பௌர்ணமி விழாவில் கலந்துக்கொண்டு பேரின்பம் பெறலாம்.

சித்திரை முழுநிலவுப் பெருவிழா!

நமது மூலிகை மணியின் சார்பில் ஷ விழா 14-வது ஆண்டு விழாவாக திருத்தணிகையம்பதியில் வழக்கம்போல் கொண்டாடப் பெற்றது. இவ்வாண்டு விழாவில் குறிப்பாக மலைமீது (மாலை நிகழ்ச்சியில்)

அகில உலகப் புகழ் பெற்ற புரவிநாட்டியச் சக்ரவர்த்தி,
கலைவாணர் N. S. K அவர்களின் வில்லுப்பாட்டு கருவிகள் பரிசுபெற்ற
கிராமிய நடனக்கலை வல்லுநர், பெங்களூர் கலைஞர்

திரு. T. C. சுந்தரமூர்த்தி அவர்கள் குழுவினரின்

'வள்ளித் திருமணம்' வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், மயில் நடன நாட்டியமும், காவடி ஆட்டமும் சிறப்பாக அமைந்து, கண்டுகளித்த அனைவர் உள்ளத்திலும் நிலைத்திருந்தது.

சித்திரை வெய்யில் கடுமையிலும் தண்ணீர் இல்லாத நேரத்தில் வேலூரார் வணிக வைசிய சத்திர நிர்வாகிகள் ஒத்துழைப்பால் (அடியார்களுக்கு உணவு படைத்தலின் போது) கங்கையே வந்தது போல் தண்ணீர் சப்ளை செய்தது குறிப்பிடத் தக்கது. மேலும் இவ்வாண்டில் மூலிகை மணி தொடர் வாசக சந்தா அன்பர்களும், மருத்துவப் பயிற்சி மாணவர்களும் ஏராளமாக வந்திருந்து கலந்து கொண்டது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. ரயில்வே ஸ்ட்ரைக்கிலும் வெகுதூரத்திலிருந்து, பலர் பேருந்து வண்டிகள் பல மாறி வந்து கலந்துகொண்ட அன்பர்கட்கு எல்லாம் மூலிகை மணி சார்பில் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்வதுடன், திருத்தணி கோயில் நிர்வாக அதிகாரி, திரு. கி. சிதம்பரம் அவர்கட்கும், பேஷ்கார், அர்ச்சகர்கள், குருக்கள், ஓதுவார் அனைவருக்கும், மற்றும் வேலூரார் வணிக வைசியர் சத்திர நிர்வாகி, ஊழியர் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி!

— மேலாளர், மூலிகை மணி.

முக்கிய அறிவிப்பு!

வாசக அன்பர்கள் தங்கள் சந்தாவை புதுப்பிக்க பணம் அனுப்பும்போது M. O. கூப்பனில் பழைய சந்தா எண்ணையும் பெயர், விலாசம் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டியது அவசியம். மருந்துகள், வெளியீடுகள் பெற M. O. அனுப்புவோர்களும், தேவையானவற்றை M. O. கூப்பனிலேயே குறிப்பிட்டு எழுதிவிட்டால் தாமதமின்றிப் பெறலாம். தனிக் கடிதம் எழுத வேண்டிய அவசியமும் இல்லை!

மேலாளர் : மூலிகை மணி,

69, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

வாசக அன்பர்களுக்கு மட்டும்

எமது தயாரிப்புகள்:

அக்டோபர்—'73 முதல்

● [விலைவாசிகள் ஏற்றக் காரணத்தால் சிறிது விலை கூட்டப்பட்டுள்ளது]

முககூட்டு கறப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்னானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து, ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ 5—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலை முடி கொட்டுவதை நிறுத்த வருடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் ஒரு முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர்கள் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 3—00

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபக மறதி, வழுக்கைத்தலை, அதிஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

முசுமுசுக்கைத் தைலம்

தலைக்குத் தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், [illegible] ரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காச நோயுடையவர்களுக்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும், பல் தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை ரூ 1—00

காது நோய் எண்ணை

காதில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், காது வலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 3—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி [illegible]ாய் படித்து தேர்வு எழுதி முதன்மையாகத் தேறலாம்.

40-நாள் மருந்து பாக்கெட் விலை ரூ 5—00

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக் கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 5—00

புதிய மருந்துகள் விபரம் :

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்னானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 5—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகமாக பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந்நோயைக் கட்டுப்படுத்தவும், காபி, டீ, போன்ற பானங்கட்குப் பதிலாக இதனை காபி போல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர, தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 5—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 2—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3—00 ம், 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4—00 ம் தபால் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பன். R. M. P.**

59, மாசிலாமணி முதலி தெரு வேலூர்-1 (வ. ஆ.)



'வெள்ளைப்பூண்டு'

(172-வது மூலிகை)

உலகத்தில் எங்கும் ஏராளமாக வளர்வது புல் பூண்டு இனங்கள் தாம். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத இயற்கைப் பொருள்களில் புல் பூண்டு இனங்கள் ஒன்றாகும். இந்த உண்மையைப் பலர் அறியமாட்டார்கள்.

பூண்டு என்ற வார்த்தைக்கே ஓர் தனி மதிப்புண்டு. நேத்திரப்பூண்டு, அரிவாள்முனைப் பூண்டு, சாம்பிராணிப்பூண்டு, மிளகாய்ப்பூண்டு, கரப்பான்பூண்டு, என்றபடி இந்த பூண்டு என்ற வார்த்தை ஓர் அரிய சக்தி கொண்டதாக அமைந்துள்ளது.

இப்படி நமது வாழ்க்கையுடன் உணவு வகையாக ஒட்டிக்கொண்டது வெள்ளைப்பூண்டு! ஆமாம் வெள்ளைப்பூண்டை அறியாதவர் எவருமிலர்; ஆனால் இதனைப் பயன்படுத்துவோர் எத்தனை பேர்? அதிலும் இந்த உணவுப்பொருள்களின் விலை ஏற்றத்திலே வெள்ளைப்பூண்டையும் விலை கொடுத்து வாங்க முடியாதவர்கள் நிறைய இருக்கத்தான் செய்வர்.

நமது நாட்டின் உணவு வகைகளில் உப்பு, மிளகாய் காரம், உறைப்பு, பருப்பு, புளிப்பு எனும் அறுவகைச் சுவையுடன் சமையல் செய்து உண்பது நாவிற்கு ருசியை மட்டும் கொடுப்பதோடு அல்லாமல், உடலுக்கு சக்தியையும், அதே நேரத்தில் நோய்த்தடுப்பு சக்தி கொண்ட தாகவும் அமைத்துவிட்டனர் நமக்கு முன்பு வாழ்ந்த பெரியோர்கள். ''உப்புப் புளியுடன் காரசாரம்'' என்பது சித்தர் வாக்கு.

வெள்ளைப்பூண்டின் குணம்

பொதுவாக இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவைகட்கு என்னென்ன குணம் உண்டோ? அவை அனைத்தும் இந்த வெள்ளைப் பூண்டிற்கு உள்ளது. உடலைப் பற்றிய வாயுவை அகற்றும், கபத்தை அகற்றிவிடும். உடலுக்குச் சூட்டைத் தந்து அதே நேரத்தில் பசியை யும் உண்டாக்கும். சிறுநீரைப் பெருக்கும்; புழுக்கொல்லி யாகும்; உடலைத் தேற்றி உடல் உரமாக்கும் சக்தியும் கொண்டதாகும் இந்த வெள்ளைப்பூண்டு.

மூலநோய் தீர முறை

வெள்ளைப்பூண்டை உடைத்து மெல்லிய தோலை உரித்து, கால் கிலோ எடைக்கு-எடுத்து ஓர் இரும்பு வாணலியில் ஆமணக்கு நெய் (விளக்கெண்ணை) விட்டு நன்ருக வேகும் வரைக்கும் சிவக்க வறுத்து எடுத்துக்கொண்டு இரவு நேரத்தில் 100 கிராம் வாயிலிட்டு மென்று தின்று, மீதியை நசுக்கி ஆசனவாயில் வைத்துக் கட்டி காலையில் எடுத்துவிட உள்மூலம், ரத்தமூலம், ஆசன சதையடைப்பு, குத்தல், நமைச்சல், ஆசனத்தைச் சுற்றி மலப்புழுக்களால் தொல்லையை அனுபவித்தவர்கள் எல்லாம் 1 வாரத்தில் இந்த வெள்ளைப்பூண்டு சிகிச்சையால் குணம் பெறுவார்கள் என்பது நிச்சயம்.

வேனல் கட்டிகளுக்கு

கோடைகாலத்தில் உடம்பில் கிளம்பும் சிறு சிறு கட்டிகளுக்கு வெள்ளைப்பூண்டை உரித்து மைபோல் அரைத்துக் கட்டிவிட கட்டிகள் யாவும் மறையும்.

செவிடு நீங்க

வெள்ளைப்பூண்டை நல்லெண்ணையுடன் கலந்து காய்ச்சி எடுத்து வைத்துக்கொண்டு தினமும் காதில் விட்டுவந்தால் காதுமந்தம், செவிடு நாளடைவில் நீங்கும். நாலு நாள் விட்டு விட்டு கேட்டுவிடாதீர்கள்! பொறுமையாக நாலு மாதம் விட்டுப் பார்த்து பலன் காணுங்கள்.

இருமல், சளி, சுவாச காசம் நீங்க

வெள்ளைப்பூண்டை உரித்து 100 கிராம் எடுத்து பசும்பால் 200 மில்லியுடன் சேர்த்துக் காய்ச்சி, பூண்டு வெந்ததும் எடுத்துக் கொண்டு பாலில் கற்கண்டு சேர்த்துக் குடித்து விட்டு, பிறகு அந்த பூண்டை மெதுவாக தின்று தீர்க்க மேற்கூறிய நோய்கள் நாளடைவில் நீங்கிப் போகும்.

வெள்ளைப்பூண்டுத் தைலம்

வெள்ளைப்பூண்டு உரித்தது 100 கிராம் அளவு எடுத்துக்கொண்டு அதனை அசல் தேங்காய் எண்ணை (500 மில்லி) யுடன் கலந்து நன்ருகக் காய்ச்சி எடுத்து வைத்துக்கொண்டு, சொறி, சிரங்கு, புண், புரைகளுக்கு வைத்து வர அவை மாறிவிடும். அதே போல் வாதவலிகள், நரம்பு பிடிப்பு, கைகால் குடைச்சல், அசதி, நரம்பு இழுப்பு ஆகியவைகளுக்கும் இளஞ்சூடாக்கித் தடவித்தேய்த்து பிடித்துவர வலிகள் நீங்கிப்போகும்.

சுளுக்கு பிடிப்புகள் நீங்க

வெள்ளைப்பூண்டுடன் உப்பு சேர்த்துக் கசக்கிப் பிழிய சாறுவரும். இந்த சாற்றை சுளுக்கு பிடிப்புகளில் தடவி தேய்க்க யாவும் நீங்கும்.


பொதுவாக எந்த முறையும் தேவையில்லாமல் நாள்தோறும் உணவுடன் வெள்ளைப்பூண்டை ஒரு 100 கிராம் குழம்பு, பொரியல், கடையல், ரசம் ஆகியவைகளில் சேர்த்து வந்தாலே மேல் குறிப்பிட்ட நோய்கள் எல்லாம் உடலைவிட்டுப் பறந்து போவதுடன் மேனி அழகும், உடல் பலமும் நலமும் உண்டாகும் என்பதில் ஐயமே இல்லை.


"சந்நியொடு வாதந் தலைநோவு தாளின்வலி
மன்னிவரும் நீர்க்கோவை வன்சீதம் — அன்னமே
உள்ளுள்ளிக் காண்பாய் உளைமூல ரோகமும்போம்
வெள்ளுள்ளித் தன்ஞல் வெருண்டு" (கு. மு.)

குறிப்பு :— வெள்ளைப்பூண்டில் அநேகமாக அனுபவ முறைகள் உண்டு. அவை எல்லாம் உணவு பரிபக்குவமாகவேசெய்து அறுசுவையுடன் உண்டு நோய் குணம் காண்பதுவே தமிழகத்தின் பழைய மரபு.

திருத்தணிகையில் மூலிகை மணி மருத்துவப் பயிற்சித் துவக்க விழா : 5—5—74

பயிற்சித் தலைவரும், முதற்குழு பயிற்சி மாணவர்களும்





உ

முருகா

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

• • •

கே: திருமணமாகி 10 ஆண்டுகள் கழிந்த பிறகும் சிற்றின்பத்தில் ஆசை தணிவதில்லை. என் வயது 38. இப்படி பல பேர்கள் உண்டு. இதற்கு ஒரு மருத்துவம் கூறினால் என்னைப் போன்ற ஏழை எளிய ஆண் மக்களுக்கு மிக்க பயன் தரும்.

ப: மனிதனுக்கு தாகம், பசி, மலம் கழிவது, சிறுநீர் போதல், காமம், கோபம், மோகம் என்றபடி 13 வித வேகம் உண்டு. இந்த வேகம் காலம், இடம் கவனிப்பதில்லை. தொண்ணூறு வயது அடைந்த தொண்டு கிழமானாலும் சிற்றின்ப நினைவு அலைகள் வரும்போது மனதில் ஓர் சபலம் உண்டாகும்; இது இயற்கை. ஆனால் இதை அதே மனதால் கட்டுப்படுத்துவது முறையாகும். இதற்கு மருத்துவம் பயன் தராது.

கே: 5, 6 வயதுள்ள குழந்தைகளுக்கு கழுத்தைச் சுற்றி கட்டிகள் வருகின்றன. இதை "கிளாண்டு - T. B." என்கிறார்கள். ஸ்டெப்டோமைசின் ஊசி, மாத்திரைகள் கொடுப்பதை விட, நாட்டு மருத்துவ முறை பயனளிக்கும். எனவே இந்த நோய் போக்க தக்க மருந்துகள் கூறவும்?

ப : தாளிச கலவைப் பொடியில் முத்து பற்பம், பவள பற்பம் கலந்து காலை மாலை தேனில் கொடுத்து வரவும். 1 மண்டலம், இரண்டு மண்டலம், அத்துடன் நெல்லிக்காய் இளகல் கொடுத்து வருவதும் நன்மை தரும்.

கே : தினசரி குளிக்கும் போது, சோப்புக்குப் பதிலாக 'ஸ்நான பவுடர்' — ஒன்று அறிவிக்கவும். கடலை மாவும், பயத்த மாவும் கலந்து வைத்து உபயோகிக்கலாமா ?

ப : 'நலங்குமாவு' சரக்கு என்று நாட்டு மருந்துக் கடைகளில் கேட்டால் கொடுப்பார்கள். அதை நன்கு உலர்த்தி அரைத்துவைத்துக் கொண்டு உடம்பில் தேய்த்து குளித்து வருவது நல்லது.

கே : என் வயது 27. 2 மாதங்களாக வயிற்றில் சிலசமயங்களில் 'கர் - புர்' என்ற சப்தமும், வயிற்றைப் புரட்டும் நிலையும், எரிச்சலும் தோன்றிவிடுகிறது. சரியாக சாப்பிட முடியவில்லை. இதைப் போக்க ஒரு எளிய மருத்துவம் கூறவும் ?

ப : தினமும் 4 வேப்பிலையும் ஒரு சிட்டிகை சீரகமும் காலையில் வாயில் போட்டு மென்று தின்று தண்ணீர் குடிக்க 10 நாளில் குணம் காணலாம். அல்லது பிரண்டைத் துவையல் நெய்விட்டு பகல் உணவில் மட்டும் 4 நாள் சாப்பிட யாவும் சரியாகும்.

கே : என் மனைவிக்கு வயது 19. திருமணமாகி ஒன்றரை வருடம் ஆயிற்று. மாதவிடாய் காலத்தில் வயிற்றுவலியால் மிகவும் கஷ்டப்படுகிறாள். எந்த வைத்தியமும் இதுவரை செய்ய வில்லை. அவள் நலமடைய ஒரு முறை கூறவும் ?

ப : முருங்கை இலையை இடித்துப் பிழிந்த சாறு 2 அவுன்சு தினமும் அதிகாலையில் குடித்துவர 15 நாளில் குணம் தெரியும்.

கே : என் வயது 20. முகத்தில் புருவம், மீசை பாகமும், முகத்தில் கீழ் பாகத்திலும் ரோமம் வளருவதில்லை. இதை தவிர்க்க வும் ரோமம் வளரவும் என்ன மருத்துவம் செய்யலாம் ?

ப : கீரையினங்களைத் தவறாமல் தினமும் ஒரு கீரையை நெய் விட்டு பகல் உணவில் சேர்த்து வரவும்.

கே : எனக்குப் பித்தப் பையில் - சிறிய கற்கள் இருப்பதாக டாக்டர் சொல்லுகிறுர். பித்தப் பையில் சில சமயம் வலியும் ஏற்படுகிறது. இதற்கு ஒரு தக்க மருத்துவம் கூறவும்?

ப : நாள் தவருமல் வாழைத்தண்டுச் சாற்றை 1 அவுன்சு வெறும் வயிற்றில் குடித்து வரவும். இதில் குணமாகவில்லையானுல் ஓர் நாட்டு மருத்துவரை நாடுவது நலம்.

கே : எனக்கு குளிர்ந்த நேரங்களிலும், இரவில் படுக்கைக்கு போகுமுன்பும், விழிப்பு ஏற்பட்ட நிலையிலும் 30, 40 தடவை தும்மல் வருகின்றது. ஆங்கில வைத்தியத்தில் பயன் தரவில்லை. தும்மல் வரும் நேரம் மூக்கில் உட்புறம் நமைச்சல் ஏற்படுகிறது. சளியும் உண்டாகிறது. இப்படி 1 ஆண்டுக்கும் மேலாக உள்ளது. இதை போக்க என்ன செய்யலாம்?

ப : குளிர்ச்சி தரும் பொருள்களை விலக்கிவிடவும். முசுமுசுக்கை இலையை தோசை மாவில் போட்டு கலந்து தோசை சுட்டு காலை நேரம் சாப்பிடவும். இரவு பாலில் தூதுவளை இலை 4 போட்டு காய்ச்சி வடிகட்டி குடித்து வரவும். 40 நாளில் யாவும் குணமாகும்.

கே : என் வயது 30. திருமணமாகி 5 ஆண்டுகளாகியும் மகப்பேறு கிட்டவில்லை. என் விந்துவில் உயிரணுக்கள் இல்லை என்றும்; அவை பெருக — அடையாறு 'IMPCOPS' மருந்துகளை 1) சுகுமார ரசாயனம், 2) லபூப் கபீர், 3) ராஜத் சந்திரோதயம், 4) பலஸர் பிஸ், இவைகளை வாங்கிச் சாப்பிட்டு வருகிறேன். இவை சாப்பிடுவதினுல் குணம் காண முடியுமா? அல்லது மகப் பேறு கிட்ட வேறு மருந்துகள் கூறி அருளவும்.

ப : குழந்தைப் பேறு கிடைப்பதற்கு மருந்துகள் சாப்பிட்டால் மட்டும் போதாது. உயிரணுக்கள் மருந்துகளினுல் மட்டும் உண்டா காது. அதிலும் விற்பனை மருந்துகள் எல்லோருக்கும் பொது பிரயோகம். ஆண், பெண் இருவரையும் சித்த மருத்துவ முறைப்படி பரிசோதனை செய்தல் வேண்டும். குற்றம் எங்கிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அவைகளைக் களைந்தெறிய முற்படவேண்டும். நாகபூசை செய்தவர் கட்கு மகப்பேறு உண்டாகியுள்ளது. சிலவகை தெய்வ பிரார்த்தனையும் அவசியம். உடலுறவில் கோளாறு இருந்தால் மகப்பேறு எங்ஙனம் உண்டாகக் கூடும். எனவே இவ்வனைத்தையும் மருத்துவ பரிசோதனை யில் தேர்வு செய்த பின்பு பரிகாரம் தேட மகப்பேறு உண்டாகலாம்.

கே : என் மகன் வயது 9 ஆகிறது. ஆஸ்துமா நோய் போல் இழுப்பும், சளியும், 'கர் கர்' என்று சப்தமும் இருந்து வருகிறது. இதைப் போக்க எளிய முறை ஒன்று கூறவும் ?

ப : துளசிச் சாறும், தூதுவளைச் சாறும் 5 துளி விதம் சேர்த்து 30 மில்லி காய்ச்சிய பசும் பாலில் கலந்து காலை மாலை கொடுத்துவர 1 வாரத்தில் யாவும் நீங்கிவிடும்.

கே : எங்கள் ஊரில் 11 வயதுள்ள ஒரு பெண் குழந்தைக்கு சர்க்கரை சத்து அதிகமாகி, உடல் இளைத்து வருகிறது. இந்த நோயை அறவே ஒழித்து நலமடைய சிறந்த வழி கூறவும் ?

ப : நாக மரப்பட்டை, அத்தி மரப்பட்டை வகைக்கு 1 பலம் எடுத்து 1 குவளை நீர் விட்டுக் காய்ச்சி, காலை மாலையாக குடிக்கச்செய்ய 1 மாதத்தில் குணமாகும்.

கே : உணவில் கடல் உப்புக்குப் பதிலாக இந்துப்பு சேர்த்து வருவது நல்லதா ? பலன் என்ன ?

ப : கடல் உப்பு சாதாரணமாக அனைவரும் பயன்படுத்துவது. எளிதில் எங்கும் கிடைக்கக் கூடியது. இந்துப்பு நோயாளிகள், பத்திய உணவு கொள்பவர்கள் சாப்பிடலாம். எங்கும் கிடைக்காதது. இதனை எல்லோரும் சாப்பிட்டு வருவதில் குற்றமில்லை.

கே : என் வயது 14. உடல் மெலிந்தும், கை கால்களில் தசை பிடிப்பில்லாமலும் இருக்கிறது. ஆனால் எடையில் அதிகமாக இருக்கிறேன். என்ன வியாதி என்று தெரியவில்லை. உடல் பருமனாகி வலிமை பெற ஆலோசனை கூறவும் ?

ப : உடல் மெலிந்து இருந்து எடை அதிகம் இருப்பின் நோய் ஒன்றுமில்லை என்று அறியவும். வயது ஏற ஏற எடையும் கூடலாம். வேறு மருந்து தேவையில்லை. சத்துள்ள உணவு கொள்ளவும்.

கே : நான் கல்லூரியில் பயிலும் மாணவன் — வயது 25. என் முகத்தில் பருக்களும், பருக்கள் விழுந்த இடத்தில் கரும்புள்ளிகளும் உள்ளன. இவைகளைப் போக்க பலவித மருந்துகள் உபயோகித்தும் பயன் தரவில்லை. என்ன காரணம் ?

ப : தம்பீ ! பருக்கள் முகத்தில் காணுவதே காம இச்சையின் எண்ணங்கள். எனவே பாலுணர்ச்சியூட்டும் கதை, கவிதை, திரைப் படம், நினைவுகள் எல்லாவற்றையும் மறந்து விடவும். இதில் பாதி குணம் காணும். பிறகு கரும்புள்ளிகள் மறைய அம்மாம்பச்சரிசி மூலிகையின் பால் எடுத்து தினமும் மேலுக்கு தடவ அந்த கரும்புள்ளி களும் மாறும்.

கே : பாக்கு, சுண்ணாம்பு, நீக்கி வெற்றிலையை மட்டும் போட்டு வந்தால் உணர்ச்சியற்று போகுமா? எனக்கு அப்படி ஏற்பட்டிருக்கிறது. இது காரணம் சரிதானா? நான் என்ன மருத்துவம் செய்யலாம்?

ப : வெற்றிலை மட்டும் சுவைக்க நாவின் உணர்வு சற்று நீங்கியது போல் காணும். இது நீங்க கோவை இலையை மென்று சுவைக்க மீண்டும் நாருசி உண்டாகும். வெற்றிலையைத் தனியே போட்டுச் சுவைக்கக் கூடாது.

கே : 'கடல் தாமரை', 'கல் தாமரை' என்பது எப்பகுதியில் நம் நாட்டில் கிடைக்கும்? இதன் குணாதிசயங்கள் என்ன?

ப : கடல் தாமரை என்பது கடல்பாறை மீது பூத்துக் கிளம்பும் ஓர் வகைப் பாசி இனம். கல் தாமரை என்பது மலைச்சாரல்களில் விசிறி போல் சில மாதங்களில் கிளம்பும். இரண்டு வகையும் காம இச்சையைத் தூண்டும் வகைகள். பலவித இளகல் முறைகளில் உபசரக்காக சேர்ப்பது நமது நாட்டின் வழக்கமாகும்.

கே : என் வயது 26. எனக்கு 2 மாதத்திற்கு ஒரு தடவை வயிற்றுக் கடுப்பும், ஒற்றைத்தலை மண்டை இடியும் மாறி மாறி வருகிறது. இந் நோயைத் தீர்க்க என்ன செய்யலாம்?

ப : வாரம் 1 முறை சவுரிப்பழத்தை நல்லெண்ணெயில் காய்ச்சி தலைமுழுகி வரவும். வாழைப்பூவை சமையலில் வாரம் இரண்டுதடவை சேர்த்து வரவும்.

கே : என் வயது 24. எனக்கு பல்லில் இரத்தக் கசிவு பல் துலக்கும் போதெல்லாம் ஏற்படுகிறது. எல்லா பற்களும் லேசாக ஆட்டம் கொண்டு இருக்கிறது. ரத்தக் கசிவு நின்று பற்கள் உறுதி அடைய ஒரு வழி கூறவும்?

ப: எமது கருவேலம்பட்டை பற்பொடி — எருக்கன் பூ பஸ்பம் கலந்தது. எல்லாவித பல் நோய்கட்கும் சிறந்தது. விலை ரூ. 1—00 4 பாக்கெட் பெற பார்சல் செலவு உள்பட ரூ. 7—00 M. O. அனுப்பி வரவழைத்து பயன்படுத்து. பல் நோய்கள் ஒழியும்.

கே: என் பேரன், பேத்தி (குழந்தைகள்) வயது 7, 10, 13 ஆகின்றது. தலையில் எக்காலத்திலும் பேன், ஈறு நிறைய இருக்கின்றது. கடையில் விற்கும் 'பேன் பவுடர்' வாங்கிப் போட்டு குளித்தால் ஒரு வாரம் இல்லாமல் இருக்கிறது. பிறகு மீண்டும் பேன், ஈறு உண்டாகிறது. தங்களின் முறை ஒன்று கூறவும்?

ப: மூக்குப் பொடியைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து தலைக்குத் தடவிவர பேன்கள் எல்லாம் ஒழியும்.

கே: என் வயது 18. (ஆண்) சரியான உயரமும், உடல் வளர்ச்சியும், சதைப்பிடிப்பும் இல்லாமல் இருக்கிறேன். தங்கள் சித்த மருத்துவ முறை தயாரிப்புகளில் ஏதாவது ஒரு நல்ல மருந்து இருப்பின் கூறினுல் மிக நன்றியுள்ளவனுவேன். எந்தவித கெட்ட பழக்கமும் இல்லாதவன்.

ப: எமது 'மூலிகை காயகல்பம்' 1-மண்டலம் சாப்பிடுங்கள் போதும்! அத்துடன் சீமை அத்திப்பழம் பாலில் போட்டுக் காய்ச்சி இரவில் குடிக்க வேண்டும்.

கே: நான் ஒரு இளைஞன். கடந்த 3 ஆண்டுகளாக பல தீயவழிகளில் ஈடுபட்டு என் தாதுவை இழந்துவிட்டேன். மீண்டும் தாதுவைப் பெற்று, உடல் வலிமை அடைய ஒரு வழி கூறும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

ப: முருங்கைப்பூ, தாதுவளைப்பூ இவைகளை சேகரித்து உலர்த்தி இடித்து வைத்துக்கொண்டு அத்துடன் சம அளவு சர்க்கரை சேர்த்து வைத்துக்கொண்டு, காய்ச்சிய பாலில் ஒரு டீஸ்பூன் கலந்து இரவில் குடித்து வரவும். இதனுல் தாது உண்டாகும்.

கே: மனிதன் ஒரு நாளைக்கு எத்தனை தடவை சிறுநீர் கழிக்கலாம்? அடிக்கடி நீர் கழித்தலை நிறுத்த என்ன மருத்துவம் செய்யலாம்?

ப : ஒரு நாளைக்கு பகலில் 6 தடவையும், இரவில் 1 தடவையும் சிறுநீர் கழிப்பது நல்லது. இதில் மிகினும் குறையினும் நோய் செய்யும். அடிக்கடி நீர் போதலைத் தடுக்க துவர்ப்பான மரப்பட்டையைக் காய்ச்சி குடிநீர் செய்து குடிக்க நீர் குறைபட போகும். (நாக மரப்பட்டை, அத்தி மரப்பட்டை).

கே : என் வயது 27. திருமணமாகாதவன். வெய்யிலில் சென்று வேலைசெய்யும் பணித்துறையில் இருப்பவன். டீ குடிக்கும் பழக்கம் உண்டு. என் உடலில் நடுக்கமேற்பட்டு, முட்டிகளில் வலி உண்டாகிறது. ஆங்கில மருந்து பலனளிக்கவில்லை. உடல்சோர்வு அடைகிறது. இந்த நிலையை போக்க என்ன செய்யலாம்?

ப : தேனீர் குடிப்பதை நிறுத்தி விடவும். வெய்யில் அலைச்சல் கூடாது. ஆங்கில மருந்துகளுக்கு அருகம்புல் முறிவு சாப்பிட்ட பிறகு அரைக்கீரையை பகல் உணவில் நாள் தவருமல் 20 நாள் சாப்பிடவும்.

கே : தங்கள் மூலிகை மணி — பங்குனி இதழில், திரு. வி. பலராமய்யா அவர்களின் கட்டுரையில், ஒரு காயகல்ப முறையை படித்து, அதன்படி செய்ய விருப்பம். இதில் சேராங்கொட்டை என்று குறிப்பிட்டிருக்கிறது. இது நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்குமா?

ப : முன் அனுபவப் பழக்கம் இன்றி ஒரு முறையைச் செய்து வெற்றி காண்பது அரிது. சேராங்கொட்டையின் சேதி அறியாது காயகல்பம் செய்ய முற்படுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படுவதற்கு நிகராகும். எனவே நேரில் குருமுகாந்திரமாக முதல் தடவை தயார் செய்வது நல்லது.

கே : திரு. பலராமய்யா கூறியிருப்பது போல், நூறு வருட வேப்ப மரம் பட்டை, வேர்பட்டை, பூ, காய், இலைகள் யாவற்றையும் கொண்டு வந்து, வாழக்காய் கல்பம் செய்யலாமா? இந்த கல்பம் சாப்பிடும்போது பத்தியம் என்ன?

ப : "நம் நாட்டு மூலிகைகள்" என்ற நமது வெளியீடு 2-ம் பாகத்தில் "வேம்பு காயகல்பம்" எளிய முறையில் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. எனவே அதன்படி யாரும் செய்து பயன்படுத்தலாம். இச்சா பத்தியம்.

கே : என் மனைவிக்கு கைவிரல் இடுக்குகளில் சேத்துப்புண் போல் தோன்றி, அரிப்பு உண்டாகிறது. வயது 17. ஒரு வருட காலமாக இப்படி உள்ளது. இதற்கு ஒரு மருத்துவம் கூறவும் ?

ப : எமது " மகா மூலிகை எண்ணை " ஒன்றே இதற்கு சரியான மருந்து. ரூ. 28—00 M. O. அனுப்பி பெறலாம். பத்தியச் சீட்டுடன் பார்சலில் அனுப்பி வைப்பார்கள்.

கே : என் வயது 25. ஆண்குறியின் கீழேயும், ஆசன வாயிலும் புண் உண்டாகி இருக்கிறது. ஆலமரம் பட்டை, வேப்பம் பட்டையையும் போட்டு காய்ச்சி, அந்த நீரில் கழுவிப் பார்த்தேன். குப்பைமேனி இலை, நெருஞ்சில் இலை அரைத்து உண்டு பார்த்தேன். குணம் காணவில்லை. உடல் பூராவும் நமைச்சல் உண்டாகி இருக்கிறது. இதைப் போக்க ஒரு சிகிச்சை கூறவும் ?

ப : நல்ல சிகிச்சையைத் தான் மேற்கொண்டீர் ! ஆனால் மேக சம்பந்தப்பட்ட உமது குறை எளிய மூலிகை சிகிச்சையில் குணமாக வில்லையே ! நாள்பட்டுப் போனது. இதைக் கடும் பத்தியமிருந்து ஒரு மருத்துவரின் ஆலோசனை பேரில் மேகராஜாங்க எண்ணை, பூவரசங் கொட்டை எண்ணை, அல்லது எமது ' மகா மூலிகை எண்ணை ' இவை களில் குணமாக்கிக் கொள்ள வேண்டும்.

கே : என் வயது 28. கடந்த 14 ஆண்டுகளாக விடாமல் ' கந்தர் சஷ்டி கவசம் ' காலை மாலை படித்து பாராயணம் செய்து வருகிறேன். திருமணமாகாமல் தடைகள் ஏற்படுகிறது. தணிகை வேலன் அருள் கிட்டவில்லை. என் குறைதீர தங்கள் ஆலோசனை நாடுகிறேன். கூறவும் ?

ப : எத்தனை ஆண்டுகள் தான் நீங்கள் பாராயணம் செய்து என்ன ? பயன் கருதாமல் ஒரே மனதுடன், பல கவலைகளை மனதில் வைத்துக்கொண்டு வாய் மட்டும் முணுமுணுக்கச் செய்தால் போதுமா ? நீங்கள் பாடலைத் துவக்கு முன்பு, "எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்" எல்லா உயிரும் தீங்கின்றி வாழவேண்டும் என்று முடிக்க, அத்தனை உயிர்களிலும் நீங்கள் ஒரு உயிர் அல்லவா? பாராயணம் பண்ணும் போதே எனக்கு அது வேண்டும் ; இது வேண்டும் ; என்று நினைத்தால் அது நிச்சயம் கிடைக்காது. இறைவனுக்கே நமது தேவை தெரியாதா ? எனவே உள்ளம் உருகி சிந்தனை செய்ய முருகனருளுவான்.

செய்திகள்:

புதுவை மாநில மூலிகை ஆராய்ச்சி
சித்த வைத்திய முன்னேற்ற சங்கம்

கடந்த 28—4—1974 ஞாயிற்றுக்கிழமை புதுவை கல்வே காலேஜ்
கட்டிடத்தில் ஷை சங்கத்தின் சார்பில்

சித்த, ஆயூர்வேத, யூனனி மருத்துவக் கண்காட்சி

புதுவை மாநில ஆளுநர்,

மேதகு. சேத்திலால் அவர்கள் திறந்து வைத்தார்.

கண்காட்சியில்

அடையாறு இந்தியன் மெடிகல் பிராக்டீஷனர்ஸ்
கூட்டுறவு பார்மஸி,

வேலூர் மூலிகை மணி,

பாண்டி அரவிந்தர் ஆஸ்ரமம், பாண்டி ஜிப்மர்,
உடுபி ஆயூர்வேதிக் காலேஜ்,
அலிகார் அஜ்மல்கான் திபியா காலேஜ்,
புதுவை அரசு விவசாய இலாகா, மற்றும் பலர் பங்கேற்றனர்.

மூலிகைக் கண்காட்சியில், மூலிகைகளின் இயற்கை அமைப்பும்
உபயோக முறைகளின் விளக்கவுரைகளும், அழகாகவும்
தெளிவாகவும் அமைந்திருந்த
வேலூர் மூலிகை மணியின் கண்காட்சி
கண்காட்சி பிரிவுகளில் சிகரமாய்த்
திகழ்ந்ததாக புதுவை நகர மக்கள் கூறி பெரிதும் பாராட்டினர்.

"அகத்தியர் குணவாகடம்"

நூல் வெளியீட்டு விழா!

பழனி மலையப்பசாமி வைத்தியசாலையின் சார்பில் பிரசுரிக்கப்பட்ட "அகத்தியர் குணவாகடம்" என்ற சித்த வைத்திய நூலை 28—4—74 அன்று மாண்புமிகு அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் வெளியிட்டு, இந்நூலைப் பிரசுரித்த டாக்டர் C. P. சாமியை வெகுவாகப் பாராட்டினர். இந்த அரிய முயற்சியை மேற்கொண்ட, டாக்டர் C P. சாமி அவர்களை, மூலிகை மணி வாசகர்ககள் சார்பில் தன் பாராட்டுதலை தெரிவிக்கின்றது.

உ



— முன் மாதத் தொடர்ச்சி

பித்தத்திற்கு (லேகியம்) இளகல்

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கிராம்பு, ஏலரிசி இவைகளை நன்கு உலர்த்தி வகைக்கு 20 கிராம் எடுத்து இடித்து தூள்செய்து வைத்துக்கொண்டு, 100 கிராம் பனைவெல்லம் பக்குவமாக நீர் சேர்த்து பாகு செய்துக்கொண்டு, அதில் அசல் நெய் 30 கிராம் சேர்த்து, இடித்து வைத்த தூளை எல்லாம் கொட்டி கிளறிவைத்துக் கொண்டு, கொட்டைப் பாக்களவு காலை மாலை சுவைத்து சாப்பிட இளைப்பு, செரியாமந்தம், கை கால் அசதி, பித்த மயக்கம் தீரும்.

பித்தப் பாண்டுக்கு

மிளகு 15 கிராம், வெள்ளைப்பூண்டு 15 கிராம் இரண்டையும் மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாற்றில் அரைத்து காலை மாலையாக இரண்டு வேளைக் கொடுத்து மோர் சோறு அரை உப்பு, கிச்சிலி ஊறுகாய் சேர்க்க 1 வாரத்திற்குள் இந்த கொடிய நோய் விலகும்.

வாந்தி நிற்க

நெல்லி வற்றல், நெற்பொரி, திப்பிலி, சீரகம், வகைக்கு 10 கிராம் எடுத்து 500 மில்லி தண்ணீர் விட்டு கொதிக்க காய்ச்சி 250 மில்லியாக சுண்டக் காய்ச்சி எடுத்து வடித்துக்கொண்டு காலை மாலை 2 வேளை கொடுக்க வாந்தி நிற்கும்.

காது நோய்க்கு

சதுரக்கள்ளிப் பாலை நெருப்பனலில் வதக்கிப் பிழிந்து காதில் விட காதுவலி நீங்கும். புளி சேர்க்கக் கூடாது.

மாரடைப்பு, மார்பு வலிக்கு

பச்சரிசி மாவில் 'புட்டு' செய்துக் கொண்டு 2 கைபிடி, முருங்கைப் பூ 1 கைபிடி, முற்றிய தேங்காய் திருகி எடுத்த பூ 1 கைபிடி யாவும் ஒன்ருக கலந்து ஒரு துணியில் எடுத்து முடிச்சு கட்டி சூடுள்ள வரை மார்பில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டே வந்து ஆறியபின்பு, அதை மார்பு நோயாளிக்கே சாப்பிட கொடுத்து சாப்பிடச் சொல்லவும். இப்படி நாள்தோறும் காலை வேளை மட்டும் செய்துவர மாரடைப்பு, மார்புவலி எல்லாம் மாயமாக மறைந்து விடும்.

குன்மத்திற்கு

ஆவாரைப்பூ, திப்பிலி, மிளகு, சுக்கு, ஏலம், அதிமதுரம், சிறுதேக்கு, வால்மிளகு வகைக்கு 5 கிராம் எடுத்து 250 மில்லி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி 125 மில்லியாக சுண்டவைத்துக் காலையில் மட்டும் சாப்பிட்டுவர 1 வாரத்தில் குன்ம வயிற்றுவலி நீங்கிவிடும்.

(தொடரும்)

மணி மொழிகள்!

— *திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்*

அன்பனே!

எப்போதும் முடிந்த அளவில் பிறருக்கு உபகாரம் செய். மன வாக்கு காயங்களால் ஒல்லும் வகையால் உதவி செய்.

மூட்டைப்பூச்சியைப் போல் பிறரை இம்சித்து வாழாதே.

எலியைப் போல் திருடி வயிற்றை வளர்க்காதே.

செல்லைப் போல் பிறர் பொருளைக் கெடுத்து மகிழாதே.

தேனீயைப் போலவும், எறும்பைப் போலவும் உழைத்து உண்; அது உனக்கு அமைதியையும், அன்பையும் தரும்.

யாசித்து, நெய்யும் பாலும் தயிரும் சேர்ந்த சிறந்த அன்னத்தை உண்பதை விட; உழைத்து உண்ணும் தண்ணீரும் சோறும் சிறந்தது.

வீரமும் புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதை விட வீரமும் புகழும் பெற்று சிறிது காலம் வாழ்வது சிறந்தது.

உன்னை யாராவது புகழும்போது மகிழ்ச்சியடையாதே; அதே போல் உன்னை இகழும்போது கவலையுமடையாதே; இகழையும் புகழையும் சமமாகக் கருது; அதனால் உன் மனது அமைதியாக இருக்கும்.

நாட்டையும் காட்டையும், இன்பத்தையும் துன்பத்தையும் வருவதையும் போவதையும், பகைமையையும் உறவையும் ஒன்றாகக் காண்க.

அலையற்ற கடல் போல் நிலையுற்றிரு.

பிறர் உன்னை வைவார்களாயின் அவ் வன்சொற்களை இன்சொற்களாகக் கருது.

நீ எக்காரணத்தைக் கொண்டும் எப்போதும் எவ்விடத்தும் பிறரை வன்சொல் கூறி வையாதே.

கிடைத்தது கூழாயினும் அதனை நெய்யன்னமாக கருதி உணவு கொள்.

மூலிகை அகராதி!

— முன் மாதத் தொடர்ச்சி

கோத்தவரை

வேறு பெயர்கள் :— சீனி அவரை, ஆங்கிலம் : டாலி கோஸ்.

விபரம்

உணவில் காய் இனமாக பயன்படுவது கொத்தவரை. ஆயினும் மருந்துண்ணும் காலத்தில் விலக்கவேண்டிய பொருள். பொதுவாக புன்செய் நிலங்களில் நம் நாட்டில் பயிரிடுவார்கள்.

உபயோக உறுப்பு — காய்

சுவை : கைப்பு, துவர்ப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு.

குணதிசயம்

பித்தநீர் பெருக்கி, சிறுநீர் பெருக்கி, வெப்பமுண்டாக்கி.

கோத்தான்

வேறு பெயர்கள் :— கொத்தான் கொடி. ஆங்கிலம் : காசிதா பிலிபாமிஸ்லின், தெலுங்கு : பாச்சி டிகா, மலையாளம் : ஆகாசவல்லி, சமஸ்கிருதம் : ஆகாஸ்வால், இந்தி : அமார் பெலி.

விபரம்

தென்னியாவிற்கே உரிய ஓர் கொடி வகை மூலிகையாகும். இது ஒரு மரத்தைப் பற்றி வளரும். மரம் பூரா மேலே படர்ந்து வரும். கீழே வேர் போகாது. ஆகாய மார்க்கமாகவே இது மரத்தைப் பற்றி வளரும். இதற்கும் பூமிக்கும் தொடர்பு கிடையாது. ஆனல் இக் கொடியின் கீழே நிழல் பட்ட இடத்தின் பூமியின் அடியிலே 10 அடி ஆழத்தில் ஒரு கிழங்கு வளரும். இந்த கிழங்குக்கும் மேலே உள்ள கொத்தான் கொடிக்கும் ஒருவித தொடர்பும் இருக்காது. இந்த கிழங்கு வளருவது மிகவும் அதிசயமாகவே இருக்கும். குறிப்பாக இந்த கொத்தான் கொடி திருவாங்கூர் கீழக்கரை ஆகிய இடங்களில் ஏராளமாக கிடைக்கிறது.

உபயோக உறுப்பு — கொடி, கிழங்கு

சுவை : குழகுழப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு.

குணதிசயம்

காமம் பெருக்கி, உடல் உரமாக்கி, குளிர்ச்சி உண்டாக்கி, உடல் தேற்றி.

கோத்துமல்லி

வேறு பெயர்கள் :— உருள் அரிசி, தணியா, கொத்தமல்லி விதை. ஆங்கிலம் : கொரியாண்டர் சீட், தெலுங்கு : கொட்டி மிரி, மலையாளம் : கோட்டம் பலாரி, கன்னடம் : கொத்தமாரி பீஜா, சமஸ்கிருதம் : குஸ்தும்பாரி, இந்தி : தன்யா.

விபரம்

சிறு செடியினம். உணவில் காய்கறிகள் மணக்கச் செய்யும் ; ருசிக்கச் செய்யும். இதனை பச்சையாக சேர்த்து சமைப்பது நமது நாட்டின் வழக்கமாகும்.

உபயோக உறுப்பு — செடி, விதை

சுவை : கார்ப்பு, வீர்யம் : சீதவெப்பம், பிரிவு : கார்ப்பு

குணதிசயம்

சிறுநீர் பெருக்கி, மணமூட்டி, அகட்டுவாய்வகற்றி, வெப்பமுண்டாக்கி, பசித்தூண்டி.

கோய்யா

வேறு பெயர்கள் :— கொய்யா மரம், ஆங்கிலம் : கோவா டிரீ, தெலுங்கு : கொய்யா பண்டு, மலையாளம் : பீரா. கன்னடம் : பீரால கொய்யா, சமஸ்கிருதம் : பீராலா, இந்தி : லால் சப்ரியம்,

விபரம்

கொய்யா மரம் தமிழ்நாட்டில் சாதாரணமாக எங்கும் காணக் கிடைக்கும். பறவையினங்கள் இதன் பழத்தை உண்டு ஜீவிக்கும். இம் மரங்கள் எங்கெங்கு உள்ளதோ, அங்கெல்லாம் பச்சைக்கிளி, குருவி, மைனு போன்ற பறவை இனங்கள் நிறைய இருக்கும். இவைகளுக்கென்றே இறைவனுல் படைக்கப்பெற்றது கொய்யா.

உபயோக உறுப்பு — இலை, பழம், வேர், பட்டை

சுவை : துவர்ப்பு, இனிப்பு, வீர்யம் : சீதவெப்பம், பிரிவு : இனிப்பு, கார்ப்பு.

குணதிசயம்

துவர்ப்பி, உரமாக்கி, மலமிளக்கி, காமம் பெருக்கி.

(தொடரும்)

மூலிகை மணியின்
கடந்த ஒன்பதாண்டு மலரும், இதழ்களும்
கைவசம் சில பிரதிகளே உள்ளன.

முதல் ஆண்டு மலர்-1,	இதழ்- 1, 2, 3, 4, 5, 7, 10, 11, 12	
மலர்-2.	இதழ்- 1, 2, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12	
மூன்ருவது ஆண்டு மலர்—3,	12 மாத இதழ்களும்	உள்ளன.
நான்காவது ஆண்டு மலர்—4,	,,	,,
ஐந்தாவது ஆண்டு மலர்—5,	,,	,,
ஆருவது ஆண்டு மலர்—6,	,,	,,
ஏழாவது ஆண்டு மலர்—7,	,,	,,
எட்டாவது ஆண்டு மலர்—8,	,,	,,
ஒன்பதாவது ஆண்டு மலர்—9,	,,	,,

மேலே குறிப்பிட்ட மூலிகை மணி இதழ்களில் தேவையானவற்றை குறிப்பிட்டு, ஒரு புத்தகம் விலை 50-காசு வீதம் தொகையை M O. அனுப்பினுல் தபாலில் அனுப்பி வைக்கப்படும். V. P. P. கிடையாது.

மேலே குறிப்பிட்ட இதழ்கள், அனைத்தையும் ஒரே தடவையில் வாங்குபவர்கட்கு, பனிரண்டரை சதவீதம் கழிவு தரப்படும்.

☐ ஆயுள் சந்தா ரூ. 150—00 செலுத்தி, சந்தா சேருவோர்க்கு மேல்கண்ட அனைத்து இதழ்களும் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்படும்

மூலிகை மணி மருத்துவப் பயிற்சி நிலையம்

தபால் மூலம் பாடப் பயிற்சி — (ஓராண்டுக் கல்வி)

அநேகர் வேண்டுகோளுக்கிணங்க சித்திரை மாத முதல் மூலிகை, சித்தமருத்துவப் பாடங்கள் துவக்கப்பட இருக்கிறது. இதில் மாணவ, மாணவியர்களாகச் சேர்ந்து தபால் மூலம் பயின்று சித்த மருத்துவராகி, சேவை செய்ய ஓர் அரிய வாய்ப்பாகும். பயிற்சியின் இறுதியில் 15 நாட்களுக்கு நேர்முக வகுப்பும் — மூலிகைகளை அறிமுகம் செய்து, தேர்வு நடத்தி நற்சான்றிதழ்களை நமது மூலிகை மன்னர் கண்ணப்பர் அவர்கள் நேரில் வழங்குவார். விண்ணப்பதாரர் ரூ. 1—00 மணியார்டர் செலுத்தி, விண்ணப்ப விபரத்தாளை பெற்று மற்ற விபரங்களை அறிந்து, சேர்ந்து எளிய முறையில் உயர்ந்த மருத்துவத்தைக் கற்று மருத்துவராகப் பணி புரியலாம்.

விபரங்கட்கு:

மூலிகை மணி மருத்துவப் பயிற்சி நிலையம்,
P. B. No. 126 — வேலூர். (வ. ஆ.)

காது நோய்!

[பண்டித - கி. ராமய்யா, நான்குனேரி]

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் — அச்செல்வம்
செல்வத்துளெல்லாம் தலை"
— (திருக்குறள்)

கௌரவ மன்னன், பிறவிக் குருடனான திருதராட்டிரன் தன் மந்திரி சஞ்சயன் சொன்னதை செவியால் கேட்டறிந்த, பாரத யுத்தமும் பகவத்கீதையும், இன்றைக்கும் உலகெங்கும் போற்றப் பெறும் நிரந்தர நூலாகும். இவன் நாடிழந்த பின்னும் பரவித்தைகளை செவிமடுத்துக் கேட்டே வீடு பெற்றான். இவ்வாறு செவி வழியாக கேட்டறிந்து பல சாதனைகளைப் புரிந்திருக்கின்றனர் என்பதை நூல் வாயிலாக அறியலாம். ஆகவே செவிச்செல்வம் மேம்பாடுடையதாகும்.

இயற்கையில் துன்பம் தீண்டாமல் வளைவான துவாரத்துக்குள் மறைபொருளாக, வெளியில் தற்காப்பு மடலுடன் செவிகள் உடலோடு பொருந்தி நிற்கும் புலன்களாகும். சாதாரணமாக சுகாதாரமுள்ள உடலுக்கு செவிநோய் வருவதில்லை. கேட்கும் சக்தியும் குறைவதில்லை.

இளவயதில் உடலில் உட்காங்கையாலும், தலைநீராலும், முதுமை பருவத்தில் இரத்தக் குறைவாலும் செவிகள் நோய்வாய்ப்படுகின்றன. சிரசில் அமிலம் கட்டி, செவிநரம்புகள் பலவீனமுள்ளவர்கட்கு காது அடைப்பு, காது இரைச்சல், சீழ்வடிதல், புண் புரை வீக்கமுண்டாகி காது நோய் வருகிறது.

சிரசில் சித்தர் காத்தோட்டித் தைலமிடுவதால் எவ்வித காது நோயும் வராது. அல்லது நெல்லி, கடுக்காய், மிளகு, மஞ்சள், வேப்பரிசி (பஞ்சகல்பம்) சமனெடை எடுத்து பசுவின் பாலில் அரைத்துக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து இளவென்னீரில் குளிப்பதாலும் காது நோய் வராது. செவிகளில் (Syringe) பீச்சாங்குழலால் நீர்பாய்ச்சி சுத்தம் செய்வது கடுமையானது. பஞ்சு சுற்றிய குச்சிகளால் சுத்தம் செய்து 'செவித் துளிகள்' விடுவதுதான் சுலபமானது. ஒலி கேட்கும் நரம்புகளை (Eardrums) சேதப் படுத்தாது.

சித்தர் முறைப்படி காய்ச்சிய தைவேளை, நாய்வேளைச் சாறு, வலம்புரிக்காய், மருள் மஞ்சள், வெள்ளைப்பூண்டு, கொச்சி மிளகாய் வித்து ஆகியவைகளை அரைத்து நல்லெண்ணெயில் போட்டு பக்குவம் செய்த 'செவித் துளிகள்' சிறந்தது.

மருந்து ஷாப்புகளில் கிடைக்கும் டிஞ்சர் துளியும், ஹைட்ரஜன் பெருக்ஸைட் பெறுநீரும் விட செவிமல மறும். ஆனால் நோய் தீராது. காதுகளைச் சுற்றி வீக்கமுண்டாவதற்கு மருள்தண்டை தீயில் வாட்டிப் பிழிந்த சாற்றில் மஞ்சள், மிளகு, அபினி அரைத்துப் புறவளையமிட சீக்கிரமாக குணம் காணும்.

எல்லா நாடுகளிலும் அரசினரால் அமைக்கப்பட்ட 'ஒலிபரப்பு நிலையங்களால்' ஒலிபரப்பப்படும் செய்திக் குறிப்புக்களை செவிமடுத்து கேட்டுத்தான் அரசினரின் ஆக்கினைகளும், விலைவாசிகளும் மாறுபாடு அடைகின்றன. ஒலியும் புகைப்படமும் ஒருங்கே ஆக்கிய அப்புரகச் சுற்றேடுகளால் — ஆடலும் பாடலுமாய், அரங்க மேடைகளில் எல்லா ஊர்களிலும் காட்சிகள் நடத்துகிறார்கள். செவிக்கின்பமான பாடல்கள் இசைத்தட்டுகளில் கருவமைக்கப்பட்டு, பாடகன் இறந்த பின்னும் நமக்கு கேட்கக் கிடைக்கிறது. ஒலிபரப்பிகளின் உதவியால் பாட்டும் பேச்சும் தொலைதூரமெங்கும் கேட்க முடிவது பெரிய முன்னேற்றமாகும். இவை அனைத்தையும் கேட்டுணர நமக்கு இன்றியமையாதது காதுகளே ஆகும். ஆகவே அவை நோயற்றிருத்தல் வேண்டும்.

ஆனால் ஒலியைச் சுருக்கியமைத்து சத்தம் ஒடுங்க விஞ்ஞானிகள் அரும்பாடு பட்டும் வெற்றி கொஞ்சமுமில்லை. ஆகாயவிமானங்கள் ஓடி நிற்கும் நிலையங்களில் செவியடங்காச் சத்தம் ஊரெங்கும் அமர்க்களம்! காலிபோர்னியா தலைநகரில் 15 நிமிடங்களுக் கொருமுறை விமானங்கள் வந்திறங்கி எடுத்துச் செல்லும் ஓசை நகர மக்களுக்கு இரவும் பகலும் ஓய்வொழிவற்ற தலைவேதனையாகிறது. செவியின்பம் பாழாகிவிட்டது.

"ஒலியே ஆதி ; செவியே செல்வம் ;
அமைதியே ஆனந்தம்"

முக்கிய கவனிப்பு !

தபால் கட்டண உயர்வு காரணத்தால், மருந்துகள் பெற இதுவரை பார்சல் செலவு ரூ. 2—00 அனுப்புவோர் யாவரும் 15—5—74 முதல் பார்சல் செலவு ரூ. 3—00 ஆக சேர்த்து அனுப்பபுமாறு வேண்டுகிறோம்.

அனுபவம் உணர்த்தும் உண்மை

க. சென்னியப்பன்,
நியூஸ் ஏஜண்ட்,

1—5—74
குமராபுரி முதல் தெரு,
சென்னிமலை. P. O.

மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய டாக்டர் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் "மூலிகை மணி" பிரமாதீச வருடம் வைகாசி இதழில், "பித்த வெடிப்புக்கும், கால் ஆணிக்கும்" — சிற்ருமணக்கு எண்ணெயும் கிளிஞ்சல் சுண்ணும்பும் சேர்த்துக் கலக்கி காயவைத்து இளஞ்சூடாகத் தடவிவர அவை நீங்கிபோகும் என்று படித்தேன். எனக்கு வயது 41. வலது கால் குதிக்காலில் ஒரு ஆணி இருந்தது. தாங்கள் கூறியிருந்தபடி 4, 5 தடவை சூடு செய்து காலில் போட்டேன். அந்த ஆணி சிறிய பலப்பம் துண்டு போல் 'முக்கால் அங்குல நீளம்' வெளியே வந்து விழுந்து விட்டது. இப்போது கால் நன்ருக ஊன்றி நடக்கிறேன்; வலியும் இல்லை என்பதை நன்றியுடன் தெரியப்படுத்துகிறேன்.

து. ஈஸ்வர நாராயணராஜ், D. A. E.
கிராம சேவக்.

மலையம்பாளையம். P. O.
ஈரோடு. Tk.

அன்புள்ள டாக்டர் உயர்திரு, கண்ணப்பர் அவர்களுக்கு, நன்றி!

தாங்கள் அனுப்பிய "நேத்திரப் பூண்டு தைலம்" தொடர்ந்து உபயோகப்படுத்தி வருகிறேன். நல்ல குணம் தெரிகிறது. மற்றும் கண் தெரியாத ஒரு ஏழைக்கு கொஞ்சம் மேற்படி தைலம் கொடுத்து உதவினேன். அவரின் கண் இப்போது நன்ருக தெரிகிறது. மேற்படி ஏழை, திரு. ஆறுமுகத்தின் சார்பில் மீண்டும் எனது நன்றியைத் தெரியப்படுத்துகிறேன்.

ஆர் ரங்கநாதன்,

27—5—74
வேலூர். வ. ஆ.

உயர்திரு. மூலிகை மணி டாக்டர் அவர்களுக்கு,

கடந்த 1 வார காலமாக பல்வலியால் துடித்துக்கொண்டிருந்த நான் தங்களின் "எருக்கன் பூ பஸ்பம் கலந்த — கருவேலம்பட்டை பற்பொடி" வாங்கி இரண்டு நாள் பல் தேய்த்ததிலேயே பல்வலி நீங்கி குணம் கண்டேன் என்பதை மகிழ்வுடன் கூறுகிறேன்.

இதய ஒலி!

K. சீனுவாச ரெட்டி, 5—4—74

மூ. ம. சந்தா எண் : 211

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். கடந்த 4 ஆண்டுகளாக நான் தங்கள் மாத இதழின் சந்தாதாரனுக இருந்து வருகிறேன். தங்கள் மூலிகை மணியை படித்து அறிந்து, டாக்டரிடம் போகாமலேயே எனக்கும், என் நண்பர்களுக்கு வரும் நோய்களுக்கு சித்த வைத்தியத்தை பயன்படுத்தி நலமடைந்து வருகிரும். சித்த வைத்தியம் ஓங்கவும், என் பிற்கால சந்ததியருக்கு நான் தேடிவைக்கும் பொக்கிஷமாகவும், தங்கள் மருத்துவ முறைகளை புத்தக வடிவில் பைண்டு செய்து பாதுகாக்கிறேன். இந்த தன்னலமற்ற சேவை செய்து வரும் தங்கட்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் தணிகை முருகன் சகல சம்பத்தும் அளிப்பார்.

இப்படிக்கு, K. சீனுவாச ரெட்டி

N. சிவஞானம், 5—3—74

7-104, உப்பிலிபாளையம்.

கோயம்புதூர்-18

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

தாங்கள் அனுப்பிய "மூலிகை ரட்சை" கிடைக்கப் பெற்றேன். 4—3—74ந் தேதி அன்றே இரண்டு மாதமாக முடியாமல் இருந்த ஒரு காரியம் நடந்தது. மேலும், மேலும் நற்பலன்கள் அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவார் என்றும், தங்களது அன்பிற்கும், என்றும் கடமைப்பட்டவன் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

இங்ஙனம், தங்கள் அன்பை நாடும், N. சிவஞானம்

Saint Jean Simon, 18—4—74

பாண்டிச்சேரி-7.

மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

தாங்கள் ஆத்மசுத்தியோடு செய்யும் மருத்துவ செயல்கள் எவ்வளவோ நபர்களை தங்கள் பால் ஈர்க்கச் செய்து வருகின்றது. அப்படி கவரப்பட்டவர்களில் நானும் ஒருவன். தங்கள் நூல்களினுல் மூலிகைகளின் குணுதிசயங்கள் நன்கு புரிந்துக்கொண்டு வருகின்றன. தங்கள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது சிறு வைத்தியங்களும் செய்து வருகிறேன். இதனுல் எனக்கு மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு வாய்ப்பும் கிடைத்து வருகிறது. என்றென்றும் தங்கள் ஆசியே என்னை முன்நின்று நடத்தும் என கூறிக்கொள்கிறேன்.

இப்படிக்கு, Saint Jean Simon

மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் வேலூர் மருத்துவர் ஆ. ரா கண்ணப்பர், 59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (வ. ஆ.)